**தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதி**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 1 – அதிமேதகு சனாதிபதியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சனாதிபதி அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 ஆகஸ்ட் 03 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிமேதகு சனாதிபதியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின்

செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) நிதியேற்பாடுகள் விளைவற்றிருத்தல்**<br>ஜனாதிபதி அலுவலகத்தின் 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 8.10 மில்லியன் பணம் சிறிதும் பயன்படுத்தப்படாததால் முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டது. | தொற்றுநோய் நிலைமை காரணமாக, தொற்றுநோய் நிலைமை காரணமாக திட்டமிட்டபடி மாநில மொழி அங்கீகாரத்தின் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பை மேற்கொள்ள முடியவில்லை. | நிதிப் பிரமாணம் 50 இன் படி செலவின மதிப்பீடுகள் முறையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டும் |
| **(ஆ) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளல்**<br>03 செலவின விடயங்களுக்காக ரூபா 620,808,200 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் , அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 388,061,381 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், ரூபா 232,746,819 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பினை ஒவ்வொரு நிதியேற்பாட்டுக்காகவும் மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதியேற்பாட்டின் 15 சதவீதம் முதல் 72 சதவீதம் வரையான வீச்சினை கொண்டிருந்தது. | நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிராத போதிலும், 1508 மற்றும் 2003 செலவின விடயங்களுக்காக பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2202 செலவின விடயத்திற்காக செயலணியின் அலுவலகம், பிரதமர் அலுவலகத்தில் நிறுவப்பட்டிருந்தமையால் மூலதன உபகரணங்களுக்காக நிதியேற்பாட்டின் தேவைப்பாடு அந்த அலுவலகத்தினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 50 இன் படி செலவின மதிப்பீடுகள் முறையாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டும் |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டுக்குரிய சனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சில செயற்திட்டங்கள் 2021 ஆம் ஆண்டளவில் வேறு அமைச்சுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டங்களில் 2019 ஆம் ஆண்டின் போது கைச்சாத்திடப்பட்டிருந்த ரூபா 3,039,495 கூட்டுத்தொகையான பொறுப்புகள் 2021 ஆம் ஆண்டின் போது சனாதிபதி செயலகத்தில் பொறுப்பொன்றாக திறைசேரி புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. | திறைசேரி புத்தகம் (SA 92) இன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அலுவலகத்தின் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளாக ரூபா 129,758,726 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் உள்ளடங்கியிருந்த 2019 ஆம் ஆண்டுக்குரிய சனாதிபதி அலுவலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட எனினும், தற்போது வேறு அமைச்சுகளின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்குரிய பொறுப்பு உருப்படிகள் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இல் உள்ளடக்கப்பட்டதுடன், அந்த செலவின விடயங்கள் 2021 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற் குரிய பொறுப்புக்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 2.3 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மரணமடைந்த சாரதி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து பெற வேண்டியதாக காணப்பட்ட ரூபா 111,780 தொகையான இடர் கடன் மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 3 முதல் 4 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்ததுடன், 2022 யூன் 05 ஆந் திகதி வரையிலும் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியகடன் மீதி ரூபா 104,900 ஆகும். அவ்வாறே நிலுவையாக காணப்பட்ட ரூபா 10,000 | மரணமடைந்த சாரதி உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2021.12.31 ஆந் திகதியில் உள்படியாக அறவிடப்பட வேுண்டிய இடர்கள் மீதி ரூபா 111,780 ஆகும் இந்த நிலுவைக் கடன் மீதி தற்போது பிணையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டவாறு உள்ளதுடன், தற்போதைய கடன் மீதியானது ரூபா 104,900 வரையிலும் குறைவடைந்துள்ளது. நிலுவையாக காணப்பட்ட ரூபா 10,000 ஆன விழா முற்பண கடன் மீதியும் கடனாளரின் வாழ்க்கைத்துணையினால் தவணை அடிப்படையில் செலுத்தப்பட்டவாறு உள்ளது. | தாமதமின்றி நிலுவை முற்பணங்கள் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆன விழா முற்பண கடன் மீதியும் மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரின் மற்றும் பூங்கா தொழிலாளி ஒருவரின் ரூபா 259,423 கூட்டுத்தொகையான ஆதனக் கடன் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்ட போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க தவறியிருந்தது. | ஓய்வூதியத் திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் 2.7 ஆம் பிரிவின் கீழ் பதவி இரத்தானமையின் அடிப்படையில் ஓய்வுபெறச்செய்தமையின் அடிப்படையில் கடனாளருக்கு கிடைக்கும் ஓய்வூதியப் பணிக்கொடையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை முற்பணங்கள் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | பதவி வறிதாக்கப்பட்ட இரு சாரதிகளிடமிருந்து ரூபா 190,302 கூட்டுத்தொகையான இடர்கடன் மீதிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக முறையே 03 வருடங்கள் மற்றும் 04 வருட காலமாக முன்கொண்டு வரப்பட்டவாறு இருந்ததுடன், 2022 யூன் 05 ஆந் திகதி வரையிலும், அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 178,910 ஆக காணப்பட்டது. அவ்வாறே, பணி வறிதாக்கப்பட்ட சாரதி ஒருவரின் ரூபா 129,615 தொகையான இடர்கடன் மீதி மற்றும் ரூபா 6,250 தொகையான விழா முற்பணக்கடன் மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 02 மற்றும் 03 வருட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. 2022 | பறி வறிதாக்கப்பட்டுள்ள இரு சாரதிகளிடமிருந்து 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட இடர் கடன் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 190,302 ஆகும். இந்த நிலுவை இடர் கடன் மீதிகள் இரண்டும் தற்போது பிணையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டவாறு உள்ளதுடன், தற்போது நிலுவை மீதியானது ரூபா 178,910 வரை குறைவடைந்துள்ளது. பணி வறிதாக்கப்பட்ட சாரதியிடமிருந்து 2021.12.31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய இடர் கடன் மீதி ரூபா 129,615 ஆக காணப்படுவதுடன், விழா முற்பண கடன் மீதியானது ரூபா 6,250 ஆகும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள இந்த கடனாளரின் மனைவியிடமிருந்து நிலுவை இடர் கடன் மற்றும் விழா முற்பண கடன் மீதி ஆகியன தற்போது அறவிடப்பட்டவாறு | தாமதமின்றி நிலுவை முற்பணங்கள் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | யூன் 05 ஆந் திகதி வரையிலும் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய இடர்கடன் மீதி ரூபா 123,486 ஆக காணப்பட்டதுடன், விழா முற்பணக் கடன் மீதி ரூபா 2,500 ஆக காணப்பட்டது. | உள்ளதுடன், தற்போது அந்த மீதிகள் ரூபா 123,486 வரையிலும், விழா முற்பண கடன் மீதியானது ரூபா 2,500 வரையும் குறைவடைந்துள்ளது. | | |
| (ஈ) | சேவையை கைவிட்டுச் சென்றுள்ள ஏழு பேரிடமிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 901,198 கூட்டுத்தொகையான கடன் மீதி அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. இந்த கடன் மீதி 1 முதல் 5 வருடங்கள் வரையான கால வீச்சில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்படுவதுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு தவறியிருந்தது. | சேவையை விட்டு வெளியேறிய நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா 212,639 மற்றும் நிலுவையிலுள்ள கடன் பாக்கி அந்தந்த பிணையாளர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று அதிகாரிகளிடமிருந்து ரூபா 680,558 ஆன மீதியை வசூலிக்க சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன | தாமதமின்றி நிலுவை முற்பணங்கள் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | அவதானிப்புக்கள்<br>இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 454 | • தனிப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் அலுவலகம் (PSO) மற்றும் உள்ளக நடவடிக்கைகள் இணைப்புப் பிரிவினால் பொருட் பட்டியல் பதிவேடு அல்லது பொ.க.க.ப. 66 பதிவேடு தயாரிக்கப்பட்டு | பொருட் பட்டியல் பதிவேடு அல்லது பொ.க.க.ப. 66 பதிவேடு தயாரிப்பதற்கு ட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2022 மார்ச் 21 ஆந் திகதியில் உள்ளபடியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வுச் சபைக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| • போக்குவரத்துப் பிரிவின் 11 உருப்படிகளுக்கு உரியதாக 23 பொருட்கள் / உபகரணங்கள் 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருட்கள் தற்போது பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது . | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • கோட்டை சனாதிபதி மாளிகையின் பூங்கா அலுவலகம் (Garden Office) அறையில் உள்ள 46 உருப்படிகளுக்கு உரியதாக 63 பொருட்கள் / உபகரணங்கள் பூங்கா கட்டுப்பாட்டாளரால் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அந்த பொருட்கள் / உபகரணங்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | (Garden Office) அறையில் உள்ள 09 உருப்படிகளுக்குரிய 12 பொருட்கள் / உபகரணங்கள் மாத்திரம் பூங்கா கட்டுப்பாட்டாளருக்கு உரிய பொருட்களாவதுடன், அந்த பொருட்கள் / உபகரணங்கள் புத்தகங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • கதிர்காமம் சனாதிபதி மாளிகையின் 22 பொருட்களுக்கு உரியதாக 30 உருப்படிகள் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருட்கள் தற்போது பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது . | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • பல்வேறு பரிவுகளிடையே பறிமாற்றப்பட்டிருந்த உரிய முறையில் பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத 09 பொருட்கள் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டன. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • 2020 ஆம் ஆண்டுக்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட சனாதிபதி பிரத்தியேக செயலகப் பிரிவினால் (இரண்டாம் தளம்) பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத மற்றும் எவராளும் வெளியிடும் கட்டளையின் அடிப்படையில் | உரிய உத்தியோகத்தர்களுக்கு திருத்துவதற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வளாகத்திற்கு மற்றும் தகவல் தொடர்பாடல் பிரிவிற்கு கையளிக்கப்பட்டிருக்காத 08 பொருட்கள் / உபகரணங்களின் 12 உருப்படிகள் பொது 141 வழங்கும் கட்டளையின் மூலம் 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நி.பி.715(2) | கோட்டை சனாதிபதி மாளிகைக்காக 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் மாளிகைப் பொறுப்பாளர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிராததுட்ன, அந்த கடமைகளை மேவுகை செய்வதற்காக அலுவலகத்தினால் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | கோட்டை சனாதிபதி மாளிகைக்காக பொறுப்பாளர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படும் வரையிலும் அந்த கடமைகளை மேவுகை செய்வதற்காக கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் எச்.எம்.ஏ.ஆர்.பீ. ஹேரத் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி.755 | • சனாதிபதி செயலாளரின் அலுவலகத்தில் பொருட் பதிவேட்டில் உள்ள பொருட்கள் பௌதீக ரீதியில் பரிசோதிக்கப்பட்டிராததுடன், வளாகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந் பெருமளவான பொருடகள் உரிய முறையில் பொது 141 வழங்கல் கட்டளையின் மூலம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | சனாதிபதி செயலாளரின் அலுவலகத்தில் பொருட் பதிவேட்டில் உள்ள பொருட்கள் பௌதீக ரீதியில் பரிசோதிக்க மதிப்பாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | • 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பொருள் மெய்மையாய்வின் மூலம் ஜனாதிபதியின் தனிப்பட்ட செயலகத்திற்கு சொந்தமான 12 மொபைல் போன்கள் மற்றும் 02 IPAD களின் பற்றாக்குறை காணப்பட்டது, மேலும் 2022 மார்ச் 21 வரை, பொருட்கள் முறையாக திருப்பி பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருட்களை எடுத்துச் சென்ற அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, உரிய முறையில் பொருட்களை மீண்டும் பிரிவிற்கு பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | • ஆராய்ச்சி மற்றும் விசேட | இந்த பிரிவில் Printer – | நிதிப் |

| | | |
|---|---|---|
| ஒப்படைப்பு பிரிவில் தற்காலிகமாக Printer – Samsung இயந்திரம் 01 "ஒரு நாடு – ஒரு சட்டம்" பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அது பௌதீக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிராததுடன்,அதற்காக எழுத்துமூல குறிப்பொன்று அல்லது வழங்கற் கட்டளையொன்று வழங்கப்பட்டமைக்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | Samsung எனும் உருப்படி "ஒரு நாடு – ஒரு சட்டம்" இற்கான சனாதிபதி செயலணிக்கு எழுத்துமூல பதிவுகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. | பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • வெளிநாட்டு தொடர்புகள் பிரிவின் பொ.க.க.ப. 66 பதிவேட்டின் பிரகாரம் 06 வகையான பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியதுடன், அந்த பொருட்கள் பல்வேறு துறைகளுக்கு கடிதங்கள் மூலம் ஒதுக்கப்பட்டாலும், அவை திருப்பி அனுப்பப்பட்டதாக உறுதிப்படுத்தி அவை வெளிநாட்டு தொடர்புத் துறையின் இருப்பு பதிவேட்டில் இருந்து நீக்கப்படவில்லை. | இந்த பொருட்கள் முறையாக சம்பந்தப்பட்ட துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன . | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • போக்குவரத்துப் பிரிவை ஜனாதிபதி செயலகத்தில் இருந்து சார்டட் வங்கிக் கட்டிடத்திற்கு மாற்றும் போது 03 பொருட்கள் தொடர்பான 09 பொருட்கள்/ உபகரணங்கள் உதவிப் பணிப்பாளர் வளாகத்திற்கு கையளிக்கப்பட்டன, ஆனால் முறையான எழுத்துப்பூர்வ ஆவணங்கள் எதுவும் காணப்படவில்லை. | இந்த பொருட்களின் பௌதிக இருப்பு காண்பிக்கப்பட்டதுடன் அவை பொருட் பட்டியல் பதிவேடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • போக்குவரத்து பிரிவினால் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பப் பிரிவு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிவித்தது, பிரிவின் முன்னாள் போக்குவரத்துப் பணிப்பாளர் பயன்படுத்திய 02 மடிக்கணினி Laptop HP Pro book மடிக்கணினிகள் மற்றும் கைத்தொலைபேசி ஆகியவை | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள Laptop 02 வழங்குவது தொடர்பாக எழுத்து மூலமான ஆவணங்கள் முறைப்படி பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த கைத்தொலைபேசி தற்போது போக்குவரத்து பிரிவில் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளகக் கட்டுப்பாட்டுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஸ்ரீ முறையான எழுத்துப்பூர்வ ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பயன்படுத்தப்பட்டு வருகிறது. | |
| • முன்னாள் ஜனாதிபதியின் தனிப்பட்ட பதவியணியின் உத்தியோகத்தர் ஒருவரின் உத்தியோகபூர்வ சாரதியின் தனிப்பட்ட கோரிக்கையின் பேரில், எந்தவொரு முறையான எழுத்துப்பூர்வ ஆவணங்களும் இல்லாமல் களஞ்சியத்திலிருந்து கைத்தொலைபேசியொன்று வழங்கப்பட்டுள்ளது. | இது தொடர்பாக முறையான விசாரணை மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • கோட்டை ஜனாதிபதி மாளிகையின் புதிய மாளிகை பாதுகாவலருக்கு பழைய மாளிகைப் பொறுப்பாளரினால் பட்டியல் பொருட் பதிவேடு இலக்கம் 9 மற்றும் 10 இல் உள்ள பொருட்களை ஒப்படைக்கவில்லை. அந்த ஆவணங்களில் உள்ளடங்கிய பொருட்கள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் நெருங்கிய பாதுகாப்பு பிரிவு, கடற்படை மற்றும் விசேட அதிரடிப்படையினரிடம் வழங்கப்பட்ட போதிலும், அவற்றின் பாதுகாப்பிற்கு பொறுப்பானவர்கள் எவரும் இல்லை. பதிவேட்டு இலக்கம் 10 இல் உள்ள பொருட்களின் விவரங்களும் மதிப்பீட்டுச் சபை அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. | இது தொடர்பாக முதற்கட்ட விசாரணை நடத்த விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • கோட்டை ஜனாதிபதி மாளிகையில் உள்ள சமையலறை பொருட் பதிவேட்டில் உள்ள கணினி பழுதுபார்க்க முடியாததுடன், அதற்குப் பதிலாக, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பிரிவினால் வேறொரு கணினி வழங்கப்பட்ட போதிலும், பட்டியல் பொருட்கள் பதிவேட்டில் | இந்த கணினி இப்போது பட்டியல் பொருட்கள் பதிவேட்டில் உள்ளிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணினி உள்ளடக்கப்பட்டுள்ளமைககான தகவல்கள் கணக்காய்வக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| • கதிர்காமம் சனாதிபதி மாளிகையின் பொ.க.க.ப. 66 பதிவேட்டில் புற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்த Wood Screen 02 2014 பெப்ரவரி 27 ஆந் திகதியும், LG TV 21” Full Model இயந்திரமொன்று 2013 ஒக்தோபர் 29 ஆந் திகதியும் அலரி மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்ததுடன், 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் மீண்டும் மாளிகைக்கு கிடைத்திருக்கவில்லை. | இந்த பொருட்கள் சரிபார்க்கப்பட்டு, உரிய தகவல்களை உறுதி செய்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • கதிர்காமம் சனாதிபதி மாளிகையின் பொ.க.க.ப. 66 பதிவேட்டில் புற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்த Sharp Q072 பெக்ஸ் இயந்திரமொன்று 2013 யூலை 14 ஆந் திகதி மற்றும் Samsung 40” LED தொலைகாட்சி இயந்திரமொன்று பழுதுபார்த்தலுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் மீண்டும் மாளிகைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும், 01 Samsung 81cm LED இயந்திரமொன்று மற்றும் 01 Samsung 40” LED இயந்திரமொன்று பொருட் பட்டியல் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும், Samsung 40” LED இயந்திரமொன்றை மீண்டும் மாளிகைக்கு ஒப்படைத்தமைக்கான தகவல்கள் எவையும் கணக்காய்வுக்கு | 01 Samsung 40” LED இயந்திரமொன்று மீண்டும் கதிர்காரம் சனாதிபதி மாளிகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 01 Samsung 40” LED இயந்திரமொன்று மற்றும் 01 Samsung 81cm LED தொலைக்காட்சி இயந்திரமொன்று பொருட் பட்டியல் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய உருப்படிகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளதுடன், குறித்த தகவல்களை உறுதிபடுத்திய பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்வைக்கப்படவில்லை. | | |
| | | • மஹியங்கனை சனாதிபதி மாளிகையின் பொ.க.க.ப. 66 பதிவேட்டில் புற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்த LED TV Sony 43” தொலைக்காட்சி இயந்திரமொன்று (SO15012780-9/SO 15012783-C) உரிய முறையில் பொருட் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டமைக்கான தகவல்கள் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உருப்படிகள் தற்போது மாளிகையின் பொருட் பட்டியலிலிருந்து உரிய முறையில் அகற்றப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நி.பி.760(அ) | பாதுகாப்பு இணைப்பு பணிபாளர் அலுவலகத்தின் கைத்தவிர்ப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த (Camera - NIKON B500) கெமரா உபகரணங்கள் தொடர்பில் கைத்தவிர்ப்பு செய்தல் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த Camera – NIKON B500 உருப்படி மீண்டும் குறித்த பிரிவிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள துடன், இந்த வருடத்தில் கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | நி.பி. 772 | கோட்டை ஜனாதிபதி மாளிகையின் பழைய லி∴ப்ட் இடப்பற்றாக்குறை காரணமாக கழற்றி அகற்றப்பட்டு, அதன் மோட்டார் உள்ளிட்ட துண்டிக்கப்பட்ட பாகங்கள் நான்கு மாடி கட்டிடத்தின் அருகே வைக்கப்பட்டிருந்தன. மேற்கூறிய லிப்ட் பழைய லிப்ட் என்பதால், அது வேலை செய்யும் நிலையில் இருந்ததால், பொருள் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைகளின்படி அதைப் பயன்படுத்த முடியும், ஆனால் 2021 டிசம்பர் 31 ஆம் தேதி வரை அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கோட்டை மானளிகைக்கு வேலை செய்யும் நிலையில் உள்ள பழைய லி∴ப்ட் தேவையில்லை என்பதால், எதிர்கால பயன்பாட்டிற்காக பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்பட்டு ள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தியின் பிரகாரம், நி.பி. 756(6) பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நிறைவு செய்யப்பட வேண்டிய காலச் சட்டகம் குறிப்பிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், 2021 திசெம்பர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மதிப்பாய்வுச் சபையொன்று | 2021 திசெம்பர் 02 ஆந் திகதிய சனாதிபதி அலுவலகத்தின் போக்குவரத்து பிரிவு தொடர்பில் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பில் மதிப்பாய்வுச் சபையொன்றை நியமித்து வாகன மதிப்பாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

நியமிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. 2022 மார்ச் 21 ஆந் திகதி வரையிலும் அலுவலகத்தின் வாகனங்கள் தொடர்பில் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஜனாதிபதியின் கம சமக பிலசந்தர எனும் வேலைத்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு ஜனாதிபதி அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கோட்டே ரஜமஹா விகாரையின் மின்சார வாயிலை நிறுவுதல், மடிவாக பல்லேவெல ஸ்ரீ உபோசதாராம விகாரையின் திருத்தப் பணிகள் மற்றும் மேற்படி விகாரையின் உத்தேச புதிய இருமாடிக் கட்டிடம், புனரமைப்பு, கேகாலை தெரணியகல பொத்தேன்கந்த மகா வித்தியாலயத்தின் பழைய கட்டிடத்தை புனரமைப்பு செய்தல், ஹிகுராக்கொட ரஜரட்ட மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வடிகால் அமைப்பினை நிர்மாணித்தல் மற்றும் நூலகக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் மற்றும் ஹெட்டிபொல வைத்தியசாலையில் இரத்து சுத்திகரிப்பு பிரிவை ஸ்தாபித்தல் போன்ற செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கோவிட் தொற்றுநோய் மற்றும் போதிய காலம் இல்லாதிருந்தமையால் வழங்குநர்களிடமிருந்து விடங்களைப் பெறுவதில் தாமதம் மற்றும் பாதகமான காலநிலை போன்றவற்றால் செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | பணிகளின் எதிர்பார்த்த அடைவினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றம் பெற்றராத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |

| | | |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மத்கமுவ விகாரையில் சங்கவாச கட்டிடம் நிர்மாணித்தல், மாத்தறை கொக்கவல மத்திய மகா வித்தியாலயத்தை நிர்மாணித்தல், மிதிவக மாபா/தெல்/மெதிவக ஆரம்ப பாடசாலையில் கணினி ஆய்வகமாக அறையொன்றை பிரித்தல், மித்தெனிய ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக மேம்பாலம் அமைத்தல், தி/ மதவாச்சி (பக்மீமன) வித்தியாலயத்தின் விளையாட்டரங்கிளை புனரமைத்தல், பதுளை, ஹல்துமுல்ல, குமாரதன்ன மற்றும் வல்லவிட்ட ஆகிய இடங்களில் உள்ள யத்தபாத பொது விளையாட்டரங்கம் புனரமைப்பு மற்றும் திக்வெல்ல பதிகம வைத்தியசாலைக்கு கொரோனா சிகிச்சை நிலையங்களில் வழங்கப்பட்ட சேவைகளுக்காக நிதி ஒதுக்கீடுகளை வழங்கும் திட்டத்திற்காக ஜனாதிபதி அலுவலகத்தினால் மொத்தமாக ரூபா 66,146,710 ஒதுக்கியிருந்த நிலையில், அதில் ரூபா 50,382,682 மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி, மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த ஒதுக்கீடு ரூபா 15,764,028 எஞ்சியிருந்தது. அந்த சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டின் 13 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அபிவிருத்தி திட்டங்களை நிறைவு செய்ய முடியவில்லை. | எதிர்பார்த்தபடி பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஜனாதிபதி அலுவலகத்தின் என்ற பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 56 வாகனங்களின் பௌதீக | ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில், பொலிஸ் மா அதிபருக்கு தகவல் கோரப்பட்டு | அலுவலகத்தில் வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக முறையான நடைமுறையொன்றை |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பு உறுதிப்படுத்தப்படவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் கூட, அலுவலகத்தில் இல்லாத வாகனங்கள் குறித்து முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்த போதுமான ஆதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. | அறிமுகப்படுத்தி அதைக் கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகைகள் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுகளின் முகவரிகளில் 45 வாகனங்கள் வேறு தனிப்பட்ட பெயர்களில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதன்படி, ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் வேறு தனிப்பட்ட பெயர்களில் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் அது தொடர்பான முகவரிகள் அல்லது அந்த முகவரிகளின் பயன்பாடு பற்றிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில், பொலிஸ் மா அதிபருக்கு தகவல் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. | அலுவலகத்தில் வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக முறையான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி அதைக் கண்காணிக்க வேண்டும். |
| (இ) | ஜனாதிபதி அலுவலகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 20 வாகனங்கள் வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை மீளப் பெறுதல் அல்லது குறித்த வாகனங்களை முறைப்படி அந்தந்த நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கோ 2022 மார்ச் 21 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில், பொலிஸ் மா அதிபருக்கு தகவல் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. | அலுவலகத்தில் வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக முறையான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி அதைக் கண்காணிக்க வேண்டும். |
| (ஈ) | வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான 13 வாகனங்கள் ஜனாதிபதி அலுவலகத்தால் பயன்படுத்தப்பட்டுள்ளன, மேலும் அந்த வாகனங்களை திருப்பி அனுப்பவோ அல்லது அதிகாரப்பூர்வமாக அலுவலகத்தில் ஒப்படைக்கவோ 2022 மார்ச் 21 ஆம் திகதி வரையிலும் | ஜனாதிபதியின் செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில், பொலிஸ் மா அதிபருக்கு தகவல் கோரப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்துரையாடல்களும் | அலுவலகத்தில் வாகனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக முறையான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தி அதைக் கண்காணிக்க வேண்டும். |

| | |
|---|---|
| எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. | இடம்பெற்று வருகின்றன. |

## 3.4 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கோட்டை ஜனாதிபதி மாளிகையின் நிலத்தடி மாளிகையின் (Safety House) அடித்தளத்தில் நிலத்தடி நீர் காரணமாக ஈரப்பதம் தங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டது. வளிச் சீராக்கல் கட்டமைப்பு செயற்படாத காரணத்தால் அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தளபாடங்களினுள் நீராவி தங்கியுள்ளதால் அவை சேதமடைந்திருந்தன. | கோட்டை மாளிகையின் கட்டுப்பாட்டு அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் நிலத்தடி மாளிகை மற்றும் அதன் தளபாடங்கள் வாரத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்யவும், வீட்டில் உள்ள தளபாடங்கள் மற்றும் பிற உபகரணங்களின் சரியான நிலையை உறுதிப்படுத்தவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | நிலத்தடி மாளிகையின் பௌதீக இருப்பை பாதுகாக்கவும், முறையாக பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |